இவற்றைப் பேராசிரியர் திரு வீ.ப.கா.சுந்தரம் தகுந்த மேற்கோள்களுடன் விளக்கிக் காட்டி இருக்கிறார். இவை பஞ்சமரபு தோன்றிய காலத்தை ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படும்.

இசை மரபு' என்ற பெயரில் நெல்லை திரு கா. சங்கரனார் ஒரு நூலை வெளியிட்டு இருக்கிறார். பஞ்சமரபில் ஸ்ருதியில் ஒரு பகுதியை ஓரளவு எடுத்துக்காட்டி இருக்கிறார்.

பஞ்சமரபு நூலின் பல பகுதிகளும் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் தக்கும் தேவைக்கு ஏற்ப, செல்வாக்கு பெற்று இருந்திருக்கக்கூடும். ஒற்றைக் கை அபிநயங்களைப்பற்றி சிலப்பதிகாரத்தில் வரும் பாடல்களுக்கும், பஞ்சமரபில் இருக்கும் பாடல்களுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன.

அவற்றை இசைக்கலைச் செல்வர் திரு வீ.ப.கா.சுந்தரம் அவர்கள் முழுமையாக எடுத்துக்காட்டவில்லை.

அபிநயக்கலை அறிஞர்கள் அபிநயங்களை யெல்லாம் ஆராயவேண்டும். நாட்டிய சாத்திரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இப்படி ஒப்பு ஆய்வு செய்தால் பரத நாட்டியம் முதலிய கலைகளுக்கு விரிவான விளக்கமும் வரலாறும் கிடைக்கும். இதற்குப் பஞ்சமரபு நூல் துணை செய்யும்.

பண்களைப்பற்றியும் சம்பூர்ண ராகங்களைப்பற்றியும் பஞ்சமரபு விளக்க உரையில் பேராசிரியர் வீ.ப.கா. சுந்தரம், ஒரு புதிய முறையைக் கையாண்டு இருக்கிறார்.

பழைய இலக்கியங்களில் காணப்படும் பண்களைப் பற்றிய குறிப்புகளை முதலில் தொகுத்து வைத்துக்கொண்டு இருக்கிறார்.

அவற்றைக்கொண்டும், பழங்காலத்தில் தோன்றிய பண்களின் நெறி முறைகளின் வழியாகவும் இன்றைய மேளகர்த்தா ராகங்களை ஆராய்ந்து அவற்றைப் பற்றிய தம் முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார்.

இவற்றை அறிவியல் அடிப்படையிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது மேளகர்த்தா ராகங்களுக்கும், பண்களுக்கும் உள்ள ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் நன்கு புலப்படும்.

பௌதிக விஞ்ஞானத்தின் அடிப்படையில் இசை தோன்றும் அதிர்வு எண்களின் துணைகொண்டும் ஆராயவேண்டும்.

பஞ்சமரபு நூல் இந்த மாதிரி நுட்பமான விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்வதற்கும் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

சென்னையில் இராமலிங்கர் பணிமன்றமும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளையும் இணைந்து நடத்தி வரும் இசைக்கலை விழாவில் திரு வீ.ப.கா. சுந்தரம் அவர்கள் 'இசைக்கலைச் செல்வர்' என்ற விருதைப் பெற்றவர்.

இப்போது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் முயற்சியால் இசைத்துறைச் சொற்களின் கலைக்களஞ்சிய நூல் உருவாக்கப்பட்டுப் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்.

திரு வீ.ப.கா. சுந்தரம் பஞ்சமரபு விருத்தி உரை நூலை மிகுந்த கவனத்துடன் உருவாக்கி இருப்பது பாராட்டுக்கு உரியது.

மேலும் மேலும் இசைத்துறையில் அறிஞர்கள் ஈடுபட்டுத் தென்னக இசையின் முழுப் பரிணாமத்தையும் எடுத்துக்காட்டும் முயற்சியில் ஈடுபட்டு, தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்கள் வெளியிட வேண்டும்.

சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றக் காதை நூலையும், தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டு இயல்-செய்யுள் இயல்களையும் ஆய்வு செய்து இசை நுட்பத்தின் பெருமையை உலகம் அறியச் செய்ய வேண்டும்.

பஞ்சமரபு ஒப்பு ஆய்வு நூலை வெளியிடுவதற்கு முன் வந்து சிறந்த முறையில் வெளியிட்டு இருக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நிர்வாக இயக்குனர் திரு. இரா. முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கும் என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் இசைக்கலைஞர்களும், நாட்டிய, நாடகக் கலைஞர்களும் இந்தப் பஞ்சமரபு விருத்தி உரை நூலைப் பயன்படுத்தித் தென்னகத்தின் இசை வரலாற்றைப் பெருக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிண்டி, சென்னை-32 நா. மகாலிங்கம்

18.2.92. (புரவலர்-பஞ்சமரபு நூல்)

பதிப்புரை

தமிழ் மொழி மரபுக்கேற்படி தொல்காப்பியச் இலக்கணம் வகுக்கும் போது எழுத்து, சொல், பொருள் என வகுத்தார். பொருளிலக்கம் தமிழர்களின் வாழ்க்கை முறையை வகுத்துரைப்பது. இதனை அகப்பொருள் என்றும் புறப்பொருள் என்றும் இரண்டாகப் பகுத்துரைத்தார். அவர் நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பண்டைய மரபுப்படி பகுத்து நிறுத்தினார். அந்தந்த நிலத்திற் குரிய பெரிய பண்ணை 'யாழ்' என்று குறித்தார் என்றும், சிறிய பண்ணை "யாழின் பகுதி" எனறு குறித்தார் என்றும் இளம் பூரணர் சுட்டிக் காட்டியுள்ளார். நிலையியல்புக்கு ஏற்றவாறு மக்கள் வாழ்க்கைமுறை மாறுவதுடன் அவர்களுடைய இசை முறைகளும் வகைகளும் மாறும். இசைக் கருவிகளும் மாறும் என்று முதன்முதல் தமிழர்கள் கண்டுபிடித்து இசையிலக்கணம் அமைத்தார்கள். சங்க இலக்கியக் காலத்தில் இசைத் துறையை வாழ்வதற்குத் துணையாகக் கொண்டு புரவலர்களை அண்டி வாழ்ந்தவர்கள் பாணர்கள். இவர்களின் இசைக் கருவி வகைகளை மலைபடு கடாம் என்னும் பழம்நூல் மிக விரிவாக விளக்குகின்றது. சங்க இலக்கியங்களில் யாழ் வருணனைகள் விரிவாக உள்ளன. இவற்றை யாராய்ந்து பண்டையச் செங்கோட்டு யாழே இன்றைய வீணையாகும் என்று ஆ.அ. வரதராஜபாண்டியர் "பாணர் கையுறை" என்னும் நூலில் விளக்கியுள்ளார் (கழக வெளியீடு எண்.) செந்தமிழ்ச் செல்வி இதழில் இசையாராய்ச்சிக் கட்டுரைகள் பலவாண்டுகளாகப் பல அறிஞர்கள் வெளியிட்டு வந்துள்ளனர். அவற்றையெல்லாம் இசையாய்வு முதறிஞர் வீ.ப.கா.சு என்னிடம் பெற்றுக் கற்று அவை பற்றி என்னிடம் உரையாடுவார்.

மறைந்துபோன இசைத் தமிழ் நூல்களுள் ஒன்று "பஞ்ச மரபு". இது மறைந்துவிட்டது என்று நெடுங்காலம் நினைத்து வந்தோம். ஆனால் இந்நூல் மீண்டும் கனடு பிடிக்கப்பட்டது அச்சேறியது. இந்த நூலில் இருந்துதான அடியார்க்கு நல்லார் பல வெண்பாக்களையும் கூறிச் சிலப்பதிகார இசை நுணுக்கங்களையும் விளக்கியுள்ளார். இவர் தமக்குக் கிடைத்த பிற நூல்களிலும் பஞ்சமரபைப் பெரிதும் பயன்படுத்துவதினின்றும் பழைய இசையிலக்கண நூல்களுள் பஞ்சமரபு

சிறந்தது என்றும் தெளிவாகிறது. இந்நூல் கிடைத்துள்ளது. ஏழிசை இறைவனின் இனிய திருவருட்டுணையாலே என்று கூறலாம்.

ஈரோடு மாவட்டம், தமிழ்வித்து வான் வே.ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்களிடம் பஞ்சமரபின் ஏடு இருப்ப தறிந்து, அதன் சிறப்பை உணர்ந்து, அந்நூலை அச்சிடத் தூண்டித் துணை நின்று தமிழுலகுக்கு அளித்த பெருமை - இராமலிங்கர் பணி மன்றத் தலைவர் அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களையே சாரும். அவரின்றேல், தெய்சிகா மணியார் தேடிய சில நூல்களை இழந்து விட்டமை போன்று இந்நூலையும் இழந்துவிட நேரிட்டிருக்கலாம். தக்கவேளை யில் நூல் அச்சேறிவிட்டது-

பஞ்சமரபு நூலின் முதற்பதிப்பு வெளிவரும் போது (1975), அருட்செல்வர், பண்ணாய்வு வித்தகர் ப. சுந்தரேசனாரைப் பெரிதும் பயன்படுத்தினார். தெய்வசிகாமணியாரும் இவரும் இணைந்து நூலின் பகுதிகட்கு உரை எழுதியதாக முதற் பதிப்பினின்றும் அறிகிறோம்.

பஞ்சமரபுக்கு விரிவான உரையமைய வேண்டுமென்ற வள்ளல் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிவைத்துள்ளவர் – கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழிசையில் ஆர்வத் துடன் ஈடுபட்டு ஆய்வு செய்து வரும் மதுரை, பசுமலை வித்து வான் டாக்டர் வீ.ப.கா., சுந்தரனார். இவர் தமிழை நாவலர் ச. சோமசுந்தரபாரதியிடமும் தமிழிசையை இசை மேதை சி. சங்கரசிவனாரிடமும் முறையாகக் கற்றவர். இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 'பழம் தமிழ் இலக்கியத்தில் இசையியல்' என்ற ஆய்வு ஏட்டினை டாக்டர் எஸ் இராமநாதரை வழிகாட்டியாகக் கொண்டு எழுதி மதுரைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம்பெற்றவர். தாமே பாடவும் இசைக் கருவிகளை இசைத் துக்காட்டி இசையிலக்கணம் விளக்கவும் வல்லவர். பழம் பண்ணாய்வு செய்யும் முறை கண்டவர். தாள இசை ஆய்வினை முறையாக மேற்கொண்டு தாள இசையின் தந்தை திருஞான சம்பந்தர் பெருமானே என்று நிறுவிச் சிறுநூலும் வெளியிட் டுள்ளார். கீர்த்தனையின் தந்தை சம்பந்தரே என்ற நூலும் வெளியிட்டுள்ளார். சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் சார்பில் நடைபெறும் பண்ணாய்வுக் கூட்டங்களில் பத்தாண்டுக்கு மேலாக அரிய ஆய்வுரைகள் நிகழ்த்தி வருபவர் அருட்செல்வர், நா.மு. அவர்கள் இவர்க்கு இசைக்கலைச் செல்வர் என்னும்

பட்டமளித்து சிறப்பித்தும். இவ்வளவு ஆற்றல்களையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இவரிடம் உரை எழுதும் அரிய பணியை அருள் வள்ளல் அவர்கள், 'இதனை இதனால் இவன் முடிக்கும்' எனறு அறிந்து ஒப்புவித்தார்கள். எடுத்த பணியைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலுடையார் கந்தரனார் செம்மை யாகச் செய்து முடித்துள்ளார்.

பஞ்சமரபு நூலில் 'கண்டமரபு' எனனும் பகுதியில் இசை யரங்கில் பாடுநர்க்கு உதவும் பல நல்ல செய்திகள் உள்ளன. பாடல் வகைகள், பண் வகைகள், இராக ஆலாபனை முறைகள் முதலியன இடம் பெற்றுள்ளன. கண்ட மரபுப் பகுதியில் குரலைப் பண்படுத்துதல் (Voice Culture) பற்றியும் விளக்குகிறது.

வாய்ப்பாட்டிற்குப் பண்டைக் காலத்தில் உதவிய பண்ணி சைப் பக்க வாத்தியங்கள் 'யாழும் குழலும்' ஆகும். குழல் பற்றி விரித்துரைப்பது 'வங்கிய வியல்' யாழ் இன்று இல்லை. ஆ. அ. வரகுணபாண்டியர் எழுதிய 'பாணர் கைவழி' என்னும் நூலில் (கழக வெளியீடு செங்கோட்டு யாழே சில மாற்றங்களுடன் இன்று வீணையாக விளங்குகிறது என்றும் விரிவாக ஆராய்ந் துள்ளார். யாழ் பற்றிக் கூறும் பகுதி "யாழ்மரபு" நாடகம் என்று இன்று வழங்கப்படுவது முன்பு 'கூத்து' என்று குறிக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் நடனத்தையும், நாட்டியத்தையும், கலை தழுவிய ஆடல்களையும் "கூத்து" எனறனர். கூத்து நிறிய பகுதி 'கூத்து மரபு' எனவே(1) யாழ் மரபு, (2) வங்கிய மரபு, (3) கண்ட மரபு (4) கூத்து மரபு, (5) தாள மரபு என ஐந்து பகுதிகளைக் கொண்டது பஞ்சமரபு. இந்த நூலுக்கு 'ஐந்து தொகை' என்ற பெயருமுண்டு என்று பாயிரச செய்யுளால் அறிகிறோம்.

வெளிவந்துள்ள இசை இலக்கண நூல்கள பலவும் இறுதி, 300, 400 ஆண்டுகளில் காணப்படும் செய்திகளை மிக விரிவாகவும் பழங்கால இசைச் செய்திகளை மிகக் குறைவாக வும் எழுதியுள்ளன. இனி வரும் காலத்தில் பழஞ்செய்திகளை யும் விரிவாக எழுதப் பஞ்சமரபு துணை புரியும் பாட்டிலும் தொகையிலும் தொல்காப்பியத்திலும் உள்ள இசைக் குறிப்பு களைத் தமிழாசிரியர்கள் விளங்கிக கொள்ளத் துணை நல்கு வது பஞ்சமரபு நூல்.

எனவே இன்றைய இசையாய்வு மாணவர்கட்கும், இசை யாய்வாளர்கட்கும், இசை வரலாறு புதிதாக எழுதுவோர்கட்கும் பஞ்சமரபு பெரிதும் உதவுவது.

கலைக் கல்லூரிகளில் பட்டப்படிப்பிறகு பாடமாக வைக் கத்தக்கவாறு இசைத் துறை மலர்ந்துளளது.

இத்துணை சீறப்புக்களை வாய்ந்த இலைச் கலைக் கருவூல மாகிய பருச்சமரபு நூலை, அருள் வள்ளல் அவர்கள், இலை யாய்வு மூதறிஞர் வீ.ப.கா.சு அவர்களைக் கொண்டு ஒப்பீட்டு விருத்தியுரை எழுதச் செய்தும் வெளியிடும் அரிய இனிய வாய்ப்பை எசவ சித்தாந்தக் கழகத்திற்கு அளித்தும் அருளிய மைக்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏழிசையாம் இறவா போதறி
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பஞ்ச மரபு

நூன்முகம்

– வி.ப.கா. சுந்தரம்

ஒப்பிட்டு விருத்தி உரை

கொட்டாட்டுப் பாட்டாய் விளங்கும் இறைவனின் இன்னருள் கூட்டப் பஞ்சமரபு நூலின் இரண்டாம் பதிப்பு, புதிய உரை பூத்து 1991இல் வெளிவருகிறது. முதற்பதிப்பில் சில வெண்பாக்களுக்கு உரையில்லை எனவே, புத்துரை தேவைப்பட்டது. எழில் மிகும் தொழில் செல்வர் முனைவர் நா. மகாலிங்கம் அவர்களை பஞ்சமரபு நூல் முழுமைக்கும் புதியவுரை அமைத்துத் தருமாறு மடல் விடுத்தார். அவ்வுரையானது ஆய்வு நிரம்பியும், ஒப்பீடுகள் காட்டியும், மேற்கோள்களை நாட்டியும், இசை வரலாற்றை யுணர்த்தியும் விளங்குதல் வேண்டும் என்று தம் மடலில் குறிப்பிட்டு ஆற்றுப்படுத்தியிருந்தார். அவர் அறிவித்த அமைப்புக்களைக் கண்டு, எனக்குத் திகைப்பும் மலைப்பும் ஏற்பட்டனவாயினும், அருள் வள்ளலின் ஆர்வத்திற்குக் கீழ்ப் படிந்து உரை எழுதத் துணிந்தேன். அஃது இன்பப் பனியாயிற்று; இரண்டாண்டுக்கு மேல் நீடித்தது. 1988க்கும் முன்னரே கையெழுத்துப் படிவம் முடிந்தது. புலவர் நா. ம. புகன்ற வாறே, ஒப்பீடுகளைத்–தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, கல்லாடம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, பெரிய புராணம், திருவிளையாடற புராணம் முதலிய நூல்களினின்றும் இயன்ற அளவுக்கு இணைத்துக் காட்ட முயன்றுள்ளேன். இவற்றை நல்ல பல அறிஞர்களை மேலும் ஆய்ந்து வளர்த்துக் கொள்ளும் காலம் மலரட்டும்.

பஞ்சமரபுச் சிறப்பு

பஞ்சமரபின்றேல் சிலப்பதிகாரத்தின் இசையிலக்கணம் இல்லை. சிலப்பதிகாரத்தின் இசையிலக்கணம் இன்றேல், தமிழ் இசை இலக்கணம் இல்லை. தமிழ்மொழி இலக்கணத்திற்குத் தொல்காப்பியம்போன்று, இயற்றமிழுக்குப் பாட்டுந்தொகையும் போன்று, இசையிலக்கணத்திற்குப் பஞ்சமரபு கிடைத்துள்ளது. இதனை நன்கு கற்றுணர்ந்த புரவலரின் புனித உள்ளம் இந் நூலைப் பரப்புதற்குப் பல ஆண்டுகள் நினைத்தது. நினைத்து நல்லுதவிகள தொடர்ந்து நல்கி வருகின்றது. இதன் செய்திகளை ஆங்கிலத்திலும் வெளியிட எண்ணம் கொண்டுள்ளார்.

மரபு அமைப்புக்கள்

பஞ்சமரபின் மூல ஏட்டுப் படிவத்திலும், முதலில் பதிப் பித்த நூலிலும் 'மரபு' என்னும் பகுப்புகளுமை தலைப்புக்களும் மிக அதிகமாய் ஆங்காங்குக் காணப்பட்டன. இந்தப் பதிப்பிலே பஞ்சமரபு (ஐந்தொகை மரபு) எனனும் நூலின் தலைப்புமு ஏற்றவாறு, ஐந்து மரபுகள் மட்டுமே பெருந் தலைப்புக்களாக நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றின் உட்பகுப்புக்களாக இயல்கள் என அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 28 இயல்கள் உள்ளன. மூல நூலில் உள்ளவாறே பாடல்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. மூல நூலில் வெண்பாக்களுக்கு வரிசை எண் இடுவதில் சில தவறுகள் இருந்தன. அவை நீக்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பீட்டுரையில் ஒவ்வொரு வெண்பாவிற்கும் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுளளன. மொத்தம் 207 வெண் பாக்கள். பஞ்சமரபு முழுவதும் வெண்பாக்களால் ஆகிய நூல். எனவே முதற்படிவத்தில் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப் பட்டிருந்த வெண்பா அல்லாத பிறவகைப் பாடல்களும் வரிசை எண்கள் இடப் பெறாத வெண்பாக்களும் இப்படிவத்தில் இடம் பெறவில்லை. அவற்றை முதற் பதிப்பின் இறுதிப் பக்கங் களில் கண்டு கொள்ளலாம். சில வெண்பாக்களுக்குப் பாட வேறுபாடு கள் ஆங்காங்குக் காட்டி, அவற்றுள் ஏற்றுக் கொள்ளு தற்குரிய பாடம் இவை இவை என்றும் காரணம் காட்டிக் குறித்துள ளேன். இவை மேலும் ஆராய்தற்குரியன. சில வெண்பாக்கள் இடைச் செருகல்கள் எனவும் காரணம் காட்டிக் கூறியுள்ளேன். இவையும் மேலும் ஆராய்தற்குரியவையே.

இசையாய்வு வளர்ச்சி

பாட்டிலும் தொகையிலும் தொல்காப்பியத்திலும் இசைக் குறிப்புக்கள் நிறையக் காணப்படுகின்றன. இவற்றைச் சிலப் பதிகாரத்திலுள்ள இசையிலக்கணத்தின் மூலமே விளங்கிக் கொள்ள இயலும். இசைக் கடலில் திசைகளைக் காட்டுவது சிலப்பதிகாரத் திசை விளக்கு. சிலப்பதிகாரம் – இசைக் கலங் கரை விளக்கம்; இதற்குக் காலத்தால் முந்திய பிந்தியநூல்களில் உள்ள இசைக் குறிப்புக்களுக்கு ஒளி வீசவது. சிலப்பதிகார நூலை டாக்டர். உ.வே. சாமிநாதர் 1892ஆம் ஆண்டு முதன் முதல் அரும்பதவுரையை வேறாக நிறுத்தியும், அடியார்க்கு நல் லார் உரையை வேறாக நிறுத்தியும் சிறப்பாக வெளியிட்டருளி னார். சிலப்பதிகாரத்திலுள்ள இசை இலக்கண நுணுக்கங் களைத் தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர் 1917 ஆம் ஆண்டு விரி வாக ஆராய்ந்து 'கருணாமிர்தசாகரம்' என்னும் மிகப் பெரும் நூலை வெளியிட்டார். பின்னர், யாழ்நூலை விபுலானந்த

அடிகளார் 1947 இல் வெளியிட்டார். இவர்களைத் தொடர்ந்து சிலப்பதிகார இசை ஆய்வில் ஈடுபட்டு நூல் இயற்றியவர்கள் – 'பாணர் கைவழி' நூலாசிரியராகிய வரகுண பாண்டியரும், 'சிலப்பதிகாரத்திசை நுணுக்க' நூலாசிரியராகிய முனைவர் எசு. இராமநாதரும் பிறரும் ஆவார்கள். இசை பற்றிய கட்டுரைகள் ஏராளம் வெளிவந்துள்ளன.

மேற்காட்டிய இசை ஆய்வாளர்களிடையே முக்கியமான அடிப்படை இசையிலக்கணத்திலேயே முற்றிலும் முரண்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. இம்மூவரும் பிற வேறுபடுவதை எடுத்துக்காட்டித், தம் கொள்கையின் பொருத்த முடைமையைப் பொருத்திக் காட்டி, எழுதும் முறையைப் பின் பற்றவில்லை. எனவே இந்த முரண்பாடுகள் தமிழிசை பரவுவதற்கு முட்டுக்கட்டைகளாக நின்று தடுத்தன. முரண்பாடுகளுள் எது சரி என்று காண முடியாது படிப்பவர்கள் திகைத்தனர்.

'பழந்தமிழ் இலக்கியத்தில் இசையியல்' என்னும் நூலும் பஞ்சமரபு உரையும் இம்முரண்பாடுகளுள் பொருத்தமுடையனவை இவை இவை என்று காட்டியுள்ளன. இது முதல் முயற்சியே; மேலும் வளர்ச்சிகள் மலர்க.

சுரக் குறியீடுகள்

'ச. ரி. ரி^{2}. க. க^2. ம. ம^2. ப. த. த^2. நி. நி^{2} - ச்'

எனப் பன்னிரண்டு தானச் சுரங்கள் நூலினுள் காட்டப்படுகின்றன. தலைப்பில் எண் குறிக்கப்படாதவைகள் மென் சுர பேதையைச் சேர்ந்தவைகள்– 'ரி^{2}' எனபது போன்று 2ஆம் எண் குறிக்கப்பட்டவைகள் இரண்டாவதாகிய வன் சுர வகை சேர்ந்தவைகள். உலக நாடுகளின இசை யிலக்கணங்கள் எல்லாம் 12 தானச் சுரங்களே கொண்டுள்ளன. சுரங்களை அசைத்து ஒலித்தும், இணைத்து ஒலித்தும் பலவேறு சுர ஒலிமங்களை உண்டாக்கலாம். இவற்றிற்கு அளவில்லை. எனவே 12 சுரத் தானங்களையே இந்த உரை நூல் கொண்டுள்ளது.

பண்களுக்குரிய இராகங்கள்

பழம் பண்ணுக்குரிய இன்றைய இராகத்தைக் கண்டு பிடிக்கும் போது கைக்கொள்ள வேண்டிய முறைகள் நான்கு உண்டு: 1) ஆதி அடிப்படை யாழ் (பெரும் பண்) என்பது முல்லை யாழ். இது செம்பாலை எனப்பெயர் பெற்றது. இதற்குரிய இன்றைய இராகம் அரிகாம்போதி (ச ரி^{2} க^2 ம ப த^2 நி ச்). இனிச் செம்பாலையைச் சிலர் 'சங்கராபரணம்' என்றும், சிலர் கரகரப்பிரியா என்றும் கொண்டது மிகப் பெரும் தவறு. சிலர் 'முல்லை யாழையே நெய்தல் யாழ்' எனக் கொண்டதும்

நாட்டு	நலம்பரப்பல்	நல்ல	கலைபுரத்தல்
வீட்டு	நெறிவிளம்பல்	வெல்லும்	தொழில்வளர்த்தல்
கூட்டும்	உறவுஅமைத்தல்	கொல்லா	நெறிபரப்பல்
சட்டும்	பொருளருளல்	சமல்	நலம்புதுக்கல்
காட்சி	ஒளிவளங்கல்	காந்தி	நெறிநடத்தல்
மீட்சி	புறஅழைத்தல்	மேவி	மிகவுழைத்தல்
ஆட்சித்	திறம்அருளல்	ஆயம்போல்	அருள்பெறுதல்
மாட்சி	மகாலிங்கம்	மாண்பு.	

(வி.ப.கா.க.)

தவறு. (யாழ் நூல் (1947) பக். 177) (2) பண்ணுப் பெயர்ப்பு என்பது நின்ற பாலையின் குறித்த சுரத்தில் தொடங்கி வலப்புறம் செல்லல் வேண்டும். இதற்கு முரணாகச் சிலர் பண்ணுப் பெயர்த்துக் காட்டியுள்ளது தவறு. 3) பண்ணுப் பெயர்ப்பு முறை, அகநானூறு (352) போன்ற பழம் நூல்களில் குறிக்கப்பட்டுள்ளதால் அதன் தொண்மையையும் மரபையும் அறியலாகும். அது புதியதன்று; வழிவழி வருவது. 4) அரிகாம்போதியில் ரிடபம் முதல் மேல்தாயி ரிடபம் வரை இசைத்தால் கிடைக்கும் இராகம் நடபைரவி (ச ரி^{2} க ம ப த நி) ஆகும். (பக். 130). குழலில் இசைத்தாலும்-யாழில், கின்னரத்தில், ஆர்மோனியத்தில் இசைத்தாலும் நமக்குக்கிடைப்பது நடபைரவியே: அலகுப் பெயர்ப்பு முறையில் பெயர்த்தாலும் நடபைரவியே வருதல் வேண்டும். கட்டங்கள் இட்டோ, வரைபடங்கள் இட்டோ பெயர்த்தாலும் நடபைரவியே வருதல் வேண்டும். சிலர் ரிடப முதல் ரிடபம் வரை அலகுப் பெயர்த்துக் கல்யாணி வரும் என்று ஆராய்ந்துள்ளது செயல் முறைக்குப் பொருந்துவதன்று. அரிகாம்போதியின் ரிடபம் சட்சமாகக் கொண்டு பண்ணுப் பெயர்க்க வருவது நடபைரவியே. இதனைப் பண்டை இசை நரம்புகளில் கூறினார்கள் – 'செம்பாலையின் துத்தம் குரலாகப் படுமலைப் பாலை' (குறிஞ்சி யாழ்) ஆகும் என்று. எனவே படுமலைப் பாலை என்பது நடபைரவியே. இதற்கு வேறு இராகம் வராது. இசைக் கருவியில் செயல்படுத்த வருவதே அலகுப் பெயர்ப்பிலும், கட்டங்களிட்டுக் காட்டப்படும் சுரப் பெயர்ப்பிலும் வருதல்வேண்டும். படுமலைப் பாலை என்பது வலமுறையின் பண்ணுப் பெயர்ப்பிலும் இடமுறையின் பெயர்ப்பிலும் நடபைரவியே (குறிஞ்சி யாழ்) ஆகும்; இதனை மாற்றிக் குழப்ப வேண்டிய தேவை யில்லை.

நாலு நிலத்திற்குரிய யாழ்களும் பழம் பெரும் பண்களும் அவற்றிற்குரிய இராகங்களும் (பஞ்ச 134 – 140)

1. முல்லையாழ் – செம்பாலை – அரிகாம்போதி.
2. குறிஞ்சி யாழ் – படுமலைப் பாலை – நடபைரவி
3. மருத யாழ் – கோடிப்பாலை – கரகரப்பிரியா.
4,5. நெய்தல் யாழ் – 1) செவ்வழி 2) விளரிப்பாலை.
6. கடுநிலப் பாலை யாழ் – அரும்பாலை – சங்கராபரணம்.
7. குரல்புணர் நல்யாழ் – மேற்செம்பாலை – கல்யாணி.

சிலப்பதிகாரப் பதிகவுரை

எனக்கு முந்திய இசை ஆராய்ச்சியாளர்கள் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள பதிகவுரை காட்டும் இசையிலக்கண குறிப்புக்களைத் தொடர்ந்து பண்

ஆராய்ச்சிகட்குப் பெரிதும் பயன்படுத்தியதாகத் தெரிய வில்லை. அப்பதிக உரைக் குறிப்புகளைச் சுட்டிக் காட்டித் தொடர்ந்து பண்களை அவர்கள் ஆராயவில்லை. அடியார்க்கு நல்லார் பல இசை இலக்கண நூல்களைக் கற்றுத் தேர்ந்த மா பெரும் இசை இலக்கணப் பேரறிஞர்; அவ்வாறே பேரறி ஞராவார் அரும்பதவுரையாசிரியரும். வடமொழி இசை யிலக்கணமாகிய சங்கீத ரத்னாகரத்தின் ஆசிரியர் சாரங்க தேவருக்குக் காலத்தால் முந்தியவர்கள் இவர்களிருவரும். பண்டைய இயற்றமிழ்ப் பாடல்களுக்கு உரை கூறுகையில் இசை யிலக்கணத்தை விளக்கிய உரையாசிரியர்களுள் தலையாயவர் அடியார்க்கு நல்லார் எனலாம். சிலப்பதிகாரப் பதிகவுரையில் அடியார்க்கு நல்லார் தொல்காப்பியக் கருப் பொருட் பாகு பாட்டுடன் இணைத்துச் சுட்டிக் காட்டியுள்ள இசை இலக் கணங்களைப் பஞ்சமரபுப் புத்துரையானது பொன்னே போல் போற்றிப் பயன் படுத்தியுள்ளது. பஞ்சமரபுரை யானது அடி யார்க்கு நல்லாரையே ஏற்ற இடங்களில் இசை யாய்வுக்குச் சிறந்த வழிகாட்டியாகக் கொண்டுள்ளது. பதிகவுரைக் கூற்றுப் படி செயல்படுத்திக் கண்டுள்ள ஆய்வு முடிவுகளைப் பஞ்ச மரபின் 134 முதல் 144 பக்கங்கள் வரை காணலாம்

நிகண்டு

நிகண்டுகளின் நூலாசிரியர்களை இசை இலக்கண ஆராய்ச்சியறிஞர்களாகக் கொள்ள இயலவில்லை. இவர்கள் தொகுப்பு ஆசிரியர்களே. பெரும் பண் வரிசையில் சிறிய கிளைப் பண்களைச் சில இடங்களில் தவறாகத் தொகுத்துள்ள னர். கிளைப்பண் வரிசையில் அல்லாத பெரும்பண்களைத் தவறாகச் சில இடங்களில் தொகுத்துளளனர். இவ்வாறு பல் வேறு வகைப் பிழைகள்பட்ட பல தொகுப்புகள் நிகண்டுகளில் உண்டு. வேறுபட்ட பாலைகளை (பெரும் பண்களை) ஒன்றெனத் தவறாகக் காட்டியுள்ளனர். எ–டு முல்லை யாழும் நெய்தல் யாழும் ஒன்று என்று நிகண்டு கூறியுள்ளது. இதை அடிப்படை யாகக் கொண்டார் விபுலானந்த அடிகள். ஆனால் முல்லை நிலம் வேறு, நெய்தல் நிலம் வேறு. எனவே முல்லைப் பெரும் பண் வேறு; நெய்தற்பெரும்பண் வேறு. (பார்க்க: பதிகவுரையில் அடியார்க்கு நல்லார் விளக்கங்களை). ஆய்ச்சியர் குரவையில் முல்லைப் பெரும்பண்ணை அடியார்க்கு நல்லார் விரித்து விளக்கியுள்ளார். கானல் வரியில் நெய்தற்குரிய இருபண்களை இங்கோ சுட்டிக் காட்டியுள்ளார். அவை செவ்வழியும் விளரி யும் ஆகும். (சிலப். 7: (47), (48). விபுலானந்தர் முல்லைப் பெரும் பண்ணும் நெய்தற் பெரும் பண்ணும் ஒன்று எனக்கொண்ட கோட்பாட்டின் அடிப்படையிலே அவருடைய மாணவர்கள்

பேராசிரியர் க. வெள்ளை வாரணரும் பண்ணாய்வாளர் ப. சுந்தரேசனாரும் தம்முடைய நூல்களிலும் கட்டுரைகளிலும் வழி மொழிந்துள்ளனர். இவை இளங்கோவின் இசையிலக்கணப் பகுப்புக்கு முரண்பட்டவை. எனவே பஞ்சமரபு உரையாளது இளங்கோவின் பகுப்பு முறையையும் அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ள பகுப்பு முறையையும் பின்பற்றியுள்ளது. முல்லைப் பெரும் பண் வேறாகவும் நெய்தற் பெரும் பண் வேறாகவும் காட்டியுள்ளது. (பழந். இலக். இசையியல் பக். 144.) சட்சமும் குரலும் ஒன்றே; ஆனால் இன்றைய சட்சம் பண்டைய இளி என்பது விபுலானந்தர் கண்ட தவறாய முடிவு நிகண்டுகளும் வேறு சில நூல்களும் கற்பனையாகச் சுரங்களையும் பறவை விலங்குகளின் சத்தங்களையும் ஒப்பிடலாம் என்று காட்டியுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளார் யாழ் நூலார். இலக்கியங்களில் காணப்படும் குறிப்புக்களால் இன்றைய முதற் சுரமாகிய சட்சமும் பண்டைய முதற் சுரமாகிய குரலும் ஒன்றே எனக் கொள்ளுகின்றனர் இன்றைய ஆய்வாளர்கள் பலர். தேவநேயப் பாவாணர் இதை விளக்கிச் செந்தமிழ்ச் செல்வியில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். (பழந். இலக். இசையியல். பக். 70..)

மோகனத்தைப் பாலைப் பெயர்த்துக் கிடைக்கும் ஐந்து திறப்பண்களுக்குரிய பாலையின் திறப்பண்களைப் பஞ்சமரபு உரை விளக்கியுள்ளது. (பக். 18).

தேவாரப் பண் ஆய்வு

தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ள பழம் பண்களைப் பற்றி இலக்கியப் பரப்பிலே ஆங்காங்கு வந்துள்ள குறிப்புக்களை எல்லாம் ஒரு சேரத் தொகுத்து வைத்துக் கொண்டு, அக் குறிப்புக்களின் வழியாக ஆராய்ந்து பழம் பண்களுக்குரிய இன்றைய இராகத்தைக் கண்டுபிடிப்பதே 'அறிவியல் பண்ணாய்வு முறை' யாகும். அதுவே வரலாற்றுப் பண்ணாய்வு முறையாகும். (பார்க்க: பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளும் டாக்டர் மு.வ. கட்டுரை பக். 83) அவ்வாறு ஆராய்ந்து கீழ்க்கண்ட பண்களுக்குரிய இராகங்களைப் பஞ்சமரபு உரை கூறுகின்றது. செந்துருத்தி=மத்தியமாவதி, (பஞ்ச. 277) பஞ்சுரம் = சங்கராபரணம். (பஞ்ச. 7, 250, 270, 274) நைவளம் (நட்ட பாடை (284) = கெம்பீர நாட்டை. இந்த 3 பண்களுக்கு மட்டுமே இன்றுள்ள தேவார ஓதுவார்கள் கூறும் இராகம் ஒத்துவருகின்றன. இந்த 3 பண்கள் நீங்க மற்றைய 20 பண்களுக்குரியனவாகத் தேவார ஓதுவார்கள் கூறி வரும் இராகங்கள் பண்டைய இசை இலக்கண மரபுக்கு ஒத்துவரவில்லை. இவை மேலும் ஆய்ந்தறியவை முடிந்த முடிவல்ல.

மேலும் ஏதுவார்கள் ஒருபண்ணுக்குப் பல இராகம் கூறுவதிலிருந்தும், ஓர் இராகத்திற்குப் பல பண் கூறுவதிலிருந்தும அவர்கள் கண்டுள்ள இராகங்கள் பலவும் உறுதிப்படவில்லை என்று அறியலாகும். இனி ஏதுவார்கள் பண்ணாய்வில், பண்ணுடைய குறிஞ்சிக்குரிய இராகம் கூறவில்லை அரிகாம்போதியைக் குறிஞ்சி என்றார்கள். திருத்தாண்டகத்தை அரிகாம்போதியில் பாடும் மரபு உண்டு என்றார்கள். இன்று ஆய்வாளர்கள் பலரும் ஆய்ச்சியர் குரவை தரும குறிப்புகளைக் கொண்டு செம்பாலையே முல்லை யாழ்ப் அரிகாம்போதி என்று கூறியுள்ளனர். இம்முடிவுக்கு நல்ல பல இலக்கியச் சான்றுகள் உண்டு. குறிஞ்சி எனனும் பெரும் பண்ணுக்குரிய இராகம் நடபைரவி என்று விபுலானந்த அடிகளும், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி யாரும், முனைவர் சீதா அம்மையாரும், முனைவர் வீ. ப. கா. சுந்தரனாரும் பிறரும் ஆராய்ந்து கூறியுள்ளனர் இது நல்ல முடிவு. சிறப்பாக இளங்கோவடிகள் 'துத்தம் குரலாகக் குறிஞ்சி' எனறு சுட்டிக் காட்டியுள்ளார் (சிலப். 28:33,34). சிலப்பதிகாரப் பண்களின் மரபே தேவாரப் பண்களின மரபு 'துத்தம் குரலாகக் குறிஞ்சி' என்பது வழிவழி வரும் மரபு: அதாவது குரல் குரலாக நிற்கும் அடிப்படைப் பாலையாகியது செம்பாலை. செம்பாலையின் (அரிகாம்போதியின்) துத்தத்தைக் குரலாகக் கொண்டு பண்ணுப் பெயர்த்தால் கிடைப்பது குறிஞ்சி யாழ். (பஞ். 130) அது இன்றைய நடபைரவி. குறிஞ்சியை அரிகாம்போதி என்று சிலர் சொல்லுவது தேவாரப் பண் ஆய்வு மரபுக்கு முரண்பட்டது: சிலப்பதிகார மரபுக்கு வேறுபட்டது: செயல்முறைக்கு முரண்பட்டது: இசையிலக்கண ஆராய்ச்சிக்குப் பொருந்தாதது. சிலப்பதிகாரத்தில் உளள பண் இலக்கணமே தேவாரப் பண் இலக்கணமாகக் கொள்ளுதல் வேண்டும். சேக்கிழார், தடுத்தாட்கொண்ட புராணத்துள் இந்தளப் பண்ணுக்கு நரம்புகள் கூறியுள்ளார் அதன்படி இந்தளம் என்பது இன்றைய இந்தோளம் ஆகும். தேவார மரபே சேக்கிழார் மரபு. பிறவாறு காட்டுவது பிழை பட்டது இளங்கோ, பஞ்சமரபின் அறிவனார், அடியார்க்கு நல்லார், சேக்கிழார், இளம்பூரணர், கல்லாடத்தின் உரையாசிரியர், கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியர் முதலிய பேரறிஞர்கள் பழம் பண்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தந்துளள குறிப்புகளின வழியாகவும் பண்ணமைக்கும் இலக்கணங்களின் வழியாகவும் பண்களுக்குரிய இசை நரம்புகளைக் கண்டுபிடித்தல் வேண்டும். இதுவே பழம் பண்களை ஆய்வு செய்யும் முறை. இந்த முறை மூலந்தான் தேவாரப் பண்களின் சுர அமைப்பைக் கண்டுபிடிக்க இயலும். (பஞ்ச. 252 – 256)

பஞ்சமரபு நூலின் பண்ணாய்வுப் பகுதியில் இந்தளம், காந்தாரம், காந்தாரப் பஞ்சமம், காமரம், குறிஞ்சிப் பெரும் பண், செந்துருத்தி, பஞ்சமம், பஞ்சரம், முல்லையாழ், நெய்தல் யாழ், முல்லையந் தீங்குழல், கொன்றையம் தீங்குழல், ஆம் பலந்தீங்குழல், சாதாரி, நைவளம், (ஒட்ட பாடை) வைகறைப் பாணி முதலிய பண்களைப் பற்றிய ஆய்வுகள் உள்ளன. (சொல்லடைவு வழியாக இந்நூலில் காண்க)

திருத்தாண்டகம், திருக் குறுந்தொகை

இவை இரண்டும் பண்கள் அல்ல. (பஞ்ச 355) சில தேவாரப் பதிப்புக் கட்டுரைகளும் இவற்றைப் பண்களாகக் கொண்டு வெளியிட்டுள்ளன. இவை செய்யுட்களே. நேரிசை என்பது மட்டும் யாப்பு முறையிலமைந்த ஒருவகைச் செய்யுளையும், இசை நரம்புகளால் அமைந்த ஒருவகைப் பண்ணையும் குறிக்கும். யாழ்முரி என்பது சில சிறப்பு வகைகளில் தாளப் பின்னலகளில் பாடும் முறையை மட்டும் குறிப்பது. அஃது அடாளவா ராகம் அன்று (பஞ்ச. 315, 316). அது பாடும் முறை என்பதற்குரிய சான்றுகள் பல உண்டு. முரிபாடும் முறை சம்பந்தர் காலத்திற்கும் முந்தியது. அம்முறையில் சம்பந்தர் இணையில்லாத் திறமை காட்டியவர். கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியர் யாழ்முரியைப் பண் எனக் கொள்ளவில்லை. அடங்கன முறையின் தொகுப்பு ஆசிரியர் (மயிலை இளமுருகனார்) யாழ்முரியை ஓர் பண் எனச் சுட்டியது (அடங்கன் முறை (1953), பக் 192) பொருத்தமுடையது அன்று.

திரு முறைகளும் பண்களும்

அப்பரடிகள் பாடியவற்றுள் நானகாம் திருமுறைப்பாடல்கள் பத்துப் பண்களுக்குரியன. ஐந்தாம் திருமுறை முழுமையும் திருக்குறுந்தொகையால் ஆகியது. இதற்குப் பலவனகப பண்கள் உரியன. இவ்வாறே ஆறாம் திருமுறை முழுமையும் திருத்தாண்டகப் பாடல்களால் ஆகியவை. இவையும் பல பண்களில் பாடற்குரியனவகளே பண்குறிக்கப்படாதவைகள்

திருத்தாண்டகம் பாடுமுறை

திருத்தாண்டகப் பாடல்கள் எழுத்தளவு கொண்டவை; எனவே தாளத்திற்கும் பண்ணுக்கும் உரியவை. (பஞ்ச.355) தாண்டகம் நடனத்திற்குரியது. அனைத்துத் தாண்டகப் பாடல்களையும் தாளமில்லாமல் அரிகாம்போதிப் பண்ணில் மட்டுமே பாடுதல் வேண்டும் என்று கட்டுப்படுத்தும் பழம் சட்டமோ நெறியோ பண்டைய இலக்கியக்குறிப்போ எதுவும் காணப்படவில்லை. அடங்கன் முறை நூல்களில் திருத்தாண்டகத்திற்கும் திருக்குறுந் தொகைக்கும் பண் குறித்துக் காட்டப்படாமையே அவை பல

வேறு பண்களுக்கு உரிமை பூண்டவை என்பதைக் காட்டு கின்றது. குறித்த பண்களுக்குரிய தேவாரப் பாடல்களை குறித்த வாறே குறித்த பண்களில் பாடி மரபு காத்தல் முறையாகும். தேவாரப் பண்களை இலக்கியக் குறிப்புக்களின் ஆய்ந்து கண்டு, மரபுப்படி பாடுதல் வேண்டும். பண் குறிக்கப்படாதவைகளைப் புத்தம் புதிய பெரும் பண்களிலும் சிலைப் பண்களிலும் பாடுதல் வேண்டும். இது மரபு வழியாகும்; இசை நெறிகளை வளர்க்கும் நெறியாகும். வீணான வேண்டாத ஆதாரமற்ற கட்டுப்பாடுகள் கூடாது. தேவார இசை நெறிகளின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டைகளையும் முட்டுக்கற்களையும் இடுதல் கூடாது.

பெய்தல் முறை

இந்த முறைப்படி மெல்லுழைப் பண் 16, வல்லுழைப் பண் 16 (சுத்த மத்திமப் பண் 16, பிரதி மத்திமப் பண் 16); ஆக மொத்தம் 32 பண்களையும் சுரத்தின் வழி அவற்றிற்குரிய பெயர் களையும் கட்டகங்களில் காட்டப்பட்டுள்ளன (பக்.157). அரும் பாலையின் மெல்லுழையை வல்லுழையாக மாற்றப்பட்டதே மேற்செம்பாலை (சங்கராபரணம் கல்யாணி). இது போன்று பெய்தல் முறையில் மெல்லுழைப் பண்கள் வல்லுழைப் பண் களாக மாற்றும் முறையையும் எண்ணத்தையும் தோற்றுவித்தது மேற்செம்பாலையே (கல்யாணியே) எனலாம். ஒரு சுரத்தை நீக்கிவிட்டு வேறொரு சுரத்தை இட்டுப் பண்ணுண்டாக்குவதே பெய்தல் முறையாகும். (பஞ்ச. 155)

வாரச் செய்யுள்

சிலப்பதிகாரத்தில் வாரப் பாடல் என்பவைகளை நடனத் திற்குப் பயன்படுத்தினார்கள் என்று அறிகின்றோம். வாரப் பாடல்கள் என்பவை எழுத்துக்களின் ஓசையளவையும் எதுகை மோனை முதலிய தொடையமைப்புக்களையும் அடிவரையறை களையும் கொண்டு விளங்குபவைகள். வாரப் பாடல் வேறு; வார நடை வேறு (உ.வே.சா. சிலப். பதிப்பு (1955) பக். 203.). வாரப் பாடலை வாரநடையில் காலப்படுத்திப் பாடும் மரபுண்டு. இந்த வாரப்பாடல்களையே பின்னர்த் தேவாரப் பாடல்கள் என்று அடைமொழி கொடுத்துக் கூறினார்கள். எனவே நடனத்திற் குரிய பாடல் இலக்கியங்கள். தொன்மையான வாரப் பாடல் கள் எனலாம். இவை வரிப்பாடல்களின் பாற்படுவன. வரிப் பாடல்களையும் பற்றி இவ்வுரை விளக்குகிறது.

சக்கரங்கள்

பரந்துபட்ட இசை இலக்கணத்தின் அமைப்புக்களைத் தொகுத்துச் சக்கரங்களில் அடைத்துக் காட்டப்பட்டுள்ளன. இச் சக்கரங்கள் புதியவை; விரிந்து பரந்து பட்டனவைகளை அரத்தினைச் சுருக்கமாகக் காட்டுகின்றன.

1. இணை முறை தொடுத்து 7 பாலைகள் உண்டாக்கல் (பக். 183)
2. செம்பாலைக்கு நேர்பாலை காணல் (பஞ்ச. 145)
3. ஐந்திறப் பண்கள் (பஞ்ச. 18)
4. சங்கக் கால யாழ்கள் (பெரும்பண்கள்) (பஞ்ச. 10)
5. துத்தம் குரலாகிய படுமலைப்பாலை (பஞ்ச. 130)
6. திறப் பண்கள் பதினைந்து (பஞ்ச. 151)
7. எதிராகும் இராசிகள் (பஞ்ச. 103)
8. முத்திரைத் துளையினின்றும் முறைத்தானம் காணல் (பஞ்ச. 174)

பஞ்சமரபுச் சிறப்பு

இந்நூல் ஆழமுடையது; பொதும் பயன்படுவது. அது கூறும் இசையமைப்புக்கள் தொன்று தொட்டு இன்றுவரை தொடர்ந்து வருபவைகள். முழு நூலும் வெண்பாக்களால் ஆனது. இடைச் சேர்க்கைகளை நீக்கி நோக்குதல் வேண்டும் நூலின் செய்திகள் இனித்த தனித்த பண்டைய இசையிலக்கண நூலாக மிளிர்வதைச் சிலப்பதிகாரமும் அதன் உரைகளும் உறுதிப்படுத்துகின்றன. கிடைத்தற்கரிய இசைக் கருவூலம்; இது கிடைத்துள்ளதை அறிவுலகம் அறிந்து போற்ற முன் வருதல் வேண்டும்.

பஞ்சமரபு நூலின் மாட்சியைத் தாமே படித்துணர்ந்த அருட் செல்வர் நா.மு. அவர்கள், முதல் படிவத்தைப் பல இடையூறுகளை வென்று தன் நுணுகிய திறத்தால் அச்சேறச் செய்து இந்தியப் பெருநாட்டின் இசைக் கலைகளுக்கு அளித் துள்ளார். அவரின்றேல் வேறு சில தமிழ் நூல்கள் அழிந்தமை போன்றே இதுவும் அழிந்திருக்கும். முதல் படிவத்தை டாக்டர். எஸ். சீதா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாட நூலாக்கித் தாமே பாடங்களை நடத்திப் பல பல்கலைக் கழகங் கள் பின்பற்றுவதற்கு வழிகாட்டினார்கள்.

அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள், இடைவெளி தராது இடையறாது தொடரும் பன்னலப் பணிகளிடையே, இரவில் கண் விழித்துப் பஞ்சமரபு நூலின் தட்டச்சிட்ட நூற் றுக்கும் மேலான பக்கங்களைத் தாமே ஆய்ந்து படித்துச் செய் தற்குரிய மாற்றங்களை முன்னேற்றங்களைக் குறித்து வைத்து எனக்குக் காட்டித் துணை செய்ததைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தேன். அவரது நுண்மாண் நுழைபுலத்தைப் போற்றுவதா? உழைப்பின் மாட்சியை உரைப்பதா? என்று வியந்தேன்.

பஞ்சமரபுக் கருத்தரங்குகளைச் சென்னைப் பல்கலைக் கழக இசைத் துறைத்தலைவர் முனைவர் சீதா அவர்கள்,

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வி. அய். சுப்ரமணியம் அவர்கள் சிறப்பாக நடத்திக் கட்டுரைகள் வெளியிட்டனர்.

அருட்செல்வர் அமைத்துள்ள இராமலிங்கர் பணிமன்றம் சென்னையிலும் திருச்சியிலும் பெரும் விரிவான சொற்பொழிவுகள் பஞ்சமரபு பற்றி நடத்தினது. பல்வேறு துணைகள் புரிந்த அருட்செல்வரின் செயலர்கள் திரு பகீரதன் அவர்கட்கும் திரு ரவி அவர்கட்கும் நன்றி கூறுகிறேன்.

இந்நூலின் 450 பக்கங்களையும் அச்சேற்றுங்கால் என்னுடன் நெடும் நாட்கள் இரவு பகல் அமர்ந்து உழைத்தும் தளர்ந்து மெய்ப்புகள் திருந்தியும் பதிப்புப் பணிகளைப்புரிந்த சைவ சித்தாந்தக் கழக ஆட்சியாளர் திரு இரா. முத்துக்குமாரசாமி அவர்கட்கு இசையுலகு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது.

பஞ்சமரபுக்கு உரை எழுதி முடித்த பின்னர் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் திட்டப்படி தமிழிசைக் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்துள்ளோம். பஞ்ச மரபில் இடம் பெறாத பல்வேறு இசைச் செய்திகள் இக்கலைக் களஞ்சியத்தில் உள்ளன. பஞ்சமரபுடன் இணைத்துக்கற்கத்தக்கது இது. தமிழிசைக் கலைக் களஞ்சியம் இப் பணிக்கு என்னை ஆளாக்கிய முனைவர் ச. முத்துக்குமரனார்க்கும் என்றும் என் நன்றி.

பண்டைய இசைத்தமிழ் பற்றி ஆய்ந்து தம் வாழ்வெல்லாம் இசைக்கே சாந்துதவிய மு. ஆபிரகாம் பண்டிதர், யாழ் நூல் விபுலானந்தர், ப. சுந்தரேசனார், க. வெள்ளைவாரணர், வே.ரா.தெய்வசிகாமணியார் எஸ். இராமநாதர் முதலியோர்க்கு என் உருவலன் பின் வணக்கம் கூறுகிறேன்.

வாழிய வந்துதவும் வள்ளன்மை
வாழிய வளம் நிறை இசையியல்.

-வீ. ப. கா. சுந்தரம்
பாரதிதாசன் பல்கலைக்கழகத்
தமிழிசைக் கலைக் களஞ்சியத்
தொகுப்பாளர், திருச்சி.

பொருளடக்கம்

மரபுகள், இயல்கள், வெண்பாத் தலைப்புகள் பக்கம்

ஆய்வு முன்னுரை 1

1. சங்கக் காலத்து இசைத்தமிழ் வரலாறு 1
   ஐரோப்பியப் பாலைகளும் தமிழகப் பாலைகளும் 4
   சங்கக் கால யாழ்களுக்குரிய பண்கள் 10
2. முத்தமிழ் – தொல்காப்பியத்திற்குத் தொன்மையது 11
3. சங்கக் காலத்து இசையோர் 13
4. சங்கக் காலத்துக் கிளைப் பண்கள் 15
5. நாவலிப் பண்களுக்கும் கிளைப் பண்கள் 17
6. யாழியல் 19
7. குழலியல் 22
8. கூத்து வகைகள் 24
9. வரிப் பாடல்கள் 26
10. பஞ்சமரபு நூலாசிரியர் 29
11. சிலப்பதிகாரத்தில் பஞ்சமரபுச் செய்யுட்கள் 31
12. ஐந்து தொகுப்புக்கள் 35
13. பஞ்சமரபு எக்காலத்து நூல் 38
14. பஞ்சமரபின் காலம் கணித்தவர்கள் 41
15. பஞ்சமரபில் இசைச் சேர்ப்புகள் 44
16. பஞ்சமரபோடு சேராத பிற்பகுதிகள் 49
17. பஞ்சமரபுக்கு ஒப்பீட்டு ஆய்வுரை 51

பஞ்சமரபு 54

ஐந்தொகை

1. யாழ் மரபு 67
2. வங்கிய மரபு 163
3. கண்ட மரபு 189
4. கூத்து மரபு 353
5. தாள மரபு 407

1. (பாயிரம்) காப்பு 58
2. அவையடக்கம் 61
3. பாயிரத்துள் அடங்குவன 62
4. பஞ்சமரபு நூலுள் அடக்கப் பொருள் 63
5. நூல், நூலாசிரியரின் பெயர் 64

1. யாழ் மரபு

67

1. யாழியல் 68

6. காப்புச் செய்யுள் 70
7. நால்வகை யாழ் 71
யாழுறுப்பு வருணனை 79
8. யாழ் வகைகட்கு நரம்பு எண்ணிக்கை 83
9. யாழ் செய்ய மரங்கள் 84

2. இசைக் கரணவியல் 85

10. எட்டுத் தொழிற்கை 85

3. இசை எழாவியல் 91

11. எண்வகை இசை எழால் 91

4. அ வட்டப் பாலையியல் 98

12. பாயப் பாலை நான்கு 98
13. பாயப் பாலை பண்ணுமுறை 98
14. வட்டப் பாலைக்கு மண்டிலம் 100
15. பன்னிரு இராசி வீடுகளில் பன்னிரு நரம்புகள் 102
இணை. கிளை. நட்பு. பகை நரம்புகள்

4. ஆ வட்டப் பாலையியல் 111

16. செம்பாலை நரம்புகட்கு இராசி வீடுகள் 111
17. செம்பாலை நரம்புகளின் பிறப்பு முறை 116
ஆயப்பாலை (120) சதுரப்பாலை
(121) திரிகோணப்பாலை (122)

5. அலகுப் பெயர்ப்பியல் 126

19. செம்பாலை நரம்புகட்கு மாத்திரை 126
20. இடமுறைத் திரிபு (அலகுப் பெயர்ப்பியல்) 128
21. வலமுறைத் திரிபு (துத்தம் குரலாய படுமலை) 129

6. நானிலப் பண்ணியல் 134

22. தொல்காப்பியம் கூறும் நானிலத்து யாழ்கள்
அவற்றிற்குரிய இராகங்கள் 134

1. முல்லையாழ் 135
2. குறிஞ்சியாழ் 138
3. மருத யாழ் 139
4. நெய்தல் யாழ் 140

23. நேர் பாலை காணும் முறை 144
நேர் திறம் 150

24. அ) நால்வகைச் சாதிப் பண்கள் 151
ஆ) நூற்று மூன்று பண்கள் 154
பெய்தல் முறையில் 16 மெல்லுழை
பெய்தல் முறையில் 16 வல்லுழை 32 பண்கள் 158
ஏழ்பாலைப் பெயர்க்காரணம் 159
பண்ணியல் சக்கரம் 161
திறப்பண் சக்கரம் 162

II. வங்கியல் மரபு 163

7. வங்கிய வியல் 164
வங்கியவியல் அறிமுகம் 164
25. வங்கியத்திற்குரிய மரங்கள் 166
26. மரந் தேர்ந்தெடுத்தலும் பதப்படுத்தலும் 167

8. பிண்ட வியல் 169
27. வங்கியத்தின் அளவுகள் 169
28. வங்கியத்தின் பகுப்புகள் 172
29. ஏழ் துளைக்கு விரல்கள் 173

9. குழலியல் 179
30. குழல் செம்பாலைக்குத் துளையிடப்பட்டது 179
இணை முறை தொடுத்து ஏழ் பாலையமைத்தல் 183
குழல் பற்றி இலக்கியச் செய்திகள் 185
ஆய இசைப் புகல் நான்கு 186
முல்லை, கொன்றை, ஆம்பல் குழல்கள் 187

III கண்ட மரபு 189

10. ஒலியியல் 190
31. ஒலியின் தோற்றம் 190

11. பூதவியல் (நீக்கிய பகுதி) 193
32. இசைக் கருவிகளில் ஐம்பூதம் 193
33. பூதம் ஒவ்வொன்றுக்குமுரிய தன்மைகள் 194
34. ஐம்பூதத்தாலாகியது உடம்பு 195
35. நீரொடு நிலமே உணவு 196
36. தீயின் பயன் காற்றின் பயன் 197
37. ஆகாயத்தின் பயன் 198

38. பத்து வாயுக்கள் 199
39. பத்து நாடிகள் 204
40. பூதங்கள் ஐந்து 205
41. ஓசை ஒலியானவன் ஈசன் 206
42. மூலாதாரம் உடம்பில் 207
43. ஓசை பிறக்குமாறு 207
44. மெய்யின் இயக்கம் 208

12. ஆளத்தியியல் 209
45. ஆளத்திற்கு எழுத்துக்கள் 209
46. ஆளத்திற்கு எழுத்து வகைகள் 209
ஆளத்தி பாடும் முறை 211
தானம் பாடும் முறை 212

13. நிறத்தவியல் 216
47. நிறம் ஐந்து 216
48. நிறங்களின் வகை 216
49. கருவி ஓசைகளின் நிறம் 220
50. ஏழ் நரம்போசை நிறம் 221
51. பண்கள் பெயர் பெறும் முறைகள் 222
52. பண் என்றதன் காரணம் 223
53. நரம்புகளின் புணர்ப்புக்கள் 225
54. இசைப் புணர்ப்பு (பிரஸ்தாரம்) 225
55. நுண் ஒலி கலக்கும் வகை 229

14. அரங்கவியல் 230
56. அரங்கிசைக்குத் தகுதியற்றோர் 230
57. அரங்கிசைக் குரியவர் 231

15. ஓசையியல் 232
58. இசைக்குரிய ஓசை வகை மூன்று 232
59. இசைக் குரித்தல்லாத ஓசைகள் எட்டு 234
60. இசைக்கு உயிரிகளின் ஓசை 236
61. ஆடுவார்க்குப் பொருந்தப் பாடுதல் 237
62. பாடலில் பொருந்தும் தொழிலைந்து 239
63. மிடற்றுக்கு மருந்து 242
64. மிடற்றுக்கு பகை 242
65. ஐந்து வகை விரவிய பஞ்சமரபு 243
66. ஐந்து ஓசைகள் 244
67. வண்ண வகைகள் 245
68. எட்டுக் காலம்: 64 பண்கள் 246

69. எட்டுக் காலப் பெயர் 247
70. சிறு பொழுதுக்குத் தெய்வங்கள் 247
71. முற்காலப் பண்கள் 248
72. சாம காலப் பண்கள் 249
தோடி
பஞ்சுரம்
காந்தாரம்
இந்தளப் பண் ஆராய்ச்சி 251
இந்தளம் தொடுத்துத் தோற்றுவித்தல் 257
73. மூன்றாம் சாமப் பண்கள் எட்டு 259
கொல்லி
கொண்டை
முல்லைப் பாணி 262
கொல்லிக் கௌவாணம் 263
74. நாலாம் சாமப் பண்கள் 264
காந்தாரப் பண் 265
நேரிசைப் பாலை 265
75 ஐந்தாம் சாமப் பண்கள் எட்டு 266
76. ஆறாம் சாமப் பண்கள் எட்டு 267
77. ஏழாம் சாமப் பண்கள் எட்டு 267
காந்தாரப் பஞ்சமம் 267
78. எட்டாம் சாமப் பண்கள் எட்டு 269
79. மங்கலப் பண்கள் பதினாறு 270
80. மங்கலப் பண்கள் எட்டு 270
81. மங்கலப் பண் சாதாரி 271
சீகாமரம் 273
பஞ்சுரம் 274
சாதாரி 271. 276
செந்துருத்தி 277
புறநீர்மை 279
நேர் பாலை 281
நட்ட பாலை (நைவளம்) 284
82. மங்கலச் சொல்கள் 286

16. (அ) பாடலியல் 287

83. மங்கல எழுத்துக்கள் 287
84. மரணம் தரும் எழுத்துச் சொல் 287
85. இசைக் குரியவர்கள் 288
86. சாதியோசை மூன்றிற்குரியார் 294

17. (அ) பாடலியல் 290
87. இன்னிசையின் பா வகைகள் எட்டு 290
தேவ பாணிகள் 297
வண்ணங்கள் 300
வரிப் பாடல்கள் 302
மேல் வைப்பு 312
88. கீதம் என்னும் உரு 317
89. பாடலடிகளின் முறை 319
90. ஒரு விகற்பம் இரு விகற்பம் 319
91. யாழ் வண்ணமாகிய சிந்து 320
92. நான்கு வகையில் வண்ணம் புணர்தல் 320
93. மாத்திரை அளவு கொண்டு முடித்தல் 321
94. பாடலைப் பற்றிய 10 அறிவு நெறிகள் 323
95. இசை பிறத்தல் 324
96. தாள முதற்றே இசை 326

18. முழவியல் 328
97. தோற் கருவிகள் 328
98. முதன்மைக் கருவிகள் 329
99. இடைக் கருவிகள் 329
100. மூவிறைவர்க்கும் முழக்கு கருவிகள் 330
101. முழவு முழக்கு முறைகள் 331
102. கடவுளர் மூவர்க்கும் கருவிகள் 331

19. பிண்டவியல் 332
103. முழவுகட்கு மரங்கள் 332
104. பேரிக்கை அளவு 332
107. படகத் தளவு 333
108. கரடிகை யளவு 333
109. மத்தள வகை
110. மத்தளத் தளவு 334
111. சல்லிவகை
112. சல்லிகை யளவு 335
113. இடக்கை
114. இடக்கையின் பகுதி 336
115. குடுப்பு அளவு
116. முடிவுகளின் வளையத்திற்கு மரம் 337
117. முழவுகட்குத் தோல் 337

20. எழுத்தியல் 338

118. சொற்கட்கட்கு எழுத்துவகை 338
119. பரதன் வழி பாட அருள் தா 339
120. சொற்கட்டுகட்குரிய எழுத்து வகைகள் 339
121. சதிக்கு எழுத்து வகை 340
122. கை வினையால் ஒசைகள் 340
123. அரை, கால் எண்ணிக்கைகளில் முடியும் தாளங்கள் 343
124. அடிப்படை எழுத்துக்கள் 346
125. கவுத்துவம் 347
126. கூத்துக்குரிய முழுக்கு முறைகள் 350

IV. கூத்து மரபுகள் 353

21. ஆடலியல் 354

127. நிருத்தம் ஏழாவன 354
128. ஏழ் கூத்துக்கள் 355
129. பதினொராடல் 356
130. ஆதி எனும் தாண்டவத்திற்குத் தாள வகைகள் 365
131. அளவுக்குரிய தாளங்கள் ஏழு 366
132–148. பிரகாசம் முதலியவைகட்குத் தாளங்கள் 374
108. தாளம் பற்றி 375
149. வாத்திய எழுத்துக்கள் 379
150. சாரி வகைகள் 380
151. கால் நிலைகள 380
152. பாதத் தொழில்கள் 381
153. வட்டணைகள் நான்கு 381
154. சிவனாடிய மூவகையாடல் 382
155. முக்கடவுளர்களும் இசைக் கணிதமும் 382
156. பொதுக் காலங்கள் 383

22. அவிநயவியல் 385

157. ஒற்றைக் கை மரப 385
158. ஒற்றைக் கை நான்கு வகை 385
159. ஆண் கை ஒன்பது வகை 385
160. பெண் கை வருமாறு 388
161. அவிக்கை ஆறு 390
162. பொதுக்கை 392
163. இரட்டைக் கை மரபு 395
164. காற்றொழில் 398

165. தேசித திறம் 398
166. காற்றொழில்கள் 399
167. வடுகிற்குக் கால்கள் 400
168. சிங்களக் கால்கள் 402
169. அங்கக் கிரிய 403

23. தண்டியலியல் 404
170. உறுப்புக்களும் தெய்வங்களும் 404
177. கோல் உறுப்பு, அளவு, தெய்வம் பிற

V. தாள மரபு 404

24. தாள உறுப்பியல் 408
178. கடவுள் வாழ்த்து 408
179. தாள உறுப்புக்கள் 408
180. கணம் என்பது என்ன? 409
181. அலகுக் கால அளவுகள் 410
182. கால் மாத்திரைப் பெயர்கள் 411
183. அரை மாத்திரைப் பெயர்கள் 412
184. ஒரு மாத்திரையதன் பெயர்கள் 414
185. இரண்டு மாத்திரையதன் பெயர்கள் 415
186. மூன்று மாத்திரையதன பெயாகள் 416
187. தாளத்தின் 5 பேருறுப்புக் குறியீடுகள் 417
188. தாளச் செயல்கள் 417

25. தாள மானவியல்
189. தளமாவதே தாளம்

26. தாளத் தெய்வவியல் 422
190. தாள உறுப்புகட்குத் தெய்வங்கள் 422
191. தாள உறுப்புகட்குக் குறியீடுகள் 423
192. கைத் தாளத்திற்குத் தெய்வங்கள் 423
193. கை விரல்கட்குத் தெய்வங்கள் 424
194. உலோகத் தாளக் கருவிகட்குத் தெய்வங்கள் 424

27. தாள வகையியல்
195. தாளக் கருவிக்கு உலோகம் 426
196. நூற்றெட்டுத் தாளம் 428
ஐந்து தாளம் 429
திருப்புகழுக்குத் தத்தகாரம் 431

197. மூவகைத் தாளம் 436
28. தாள எண்ணியல்
198. எண்களுக்குக் குறியீடுகள் 437
199. பப்பாதி அளவுகள் 437
200. மதிகோல் முறை, முக்கோணம், சதுரம் 437
201. மூன்று எடுப்புகள் 438
202. பகணம் 16 மகணம் 440
203. யகணம் 20 நகணம் 440
204. சகணம் 16 சகணம் 440
205. ரகணம் 20 தகணம் 441
206. எண் கணத்துக்கும் தெய்வம் 441
207. லகுவும் குருவும் மட்டுமே கூட்டுதல் 443 – 444

அணிந்துரை

டாக்டர் நா. மகாலிங்கம்

'பஞ்சமரபு' என்ற இந்த இசை நூல் அறிவனார் என்னும் இசை மேதையால் இயற்றப்பட்ட நூல்.

மகாமகோ உபாத்தியாயர் - டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் நம் வாழ்நாள் முழுவதும் தமிழ் ஏடுகளைத் தேடிப் பதிப்பித்தவர்.

திரு. உ.வே.சாமிநாதய்யர் தோன்றி தமிழ் ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடாமல் இருந்திருந் தால் சங்க நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள் முதலிய நூல்களை நாம் பெற்றிருக்க முடியாது.

தம் வாழ்நாள் முழுவதும் ஏடு தேடிய திரு உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் சிலப்பதிகார நூலுக்கு ஆய்வு உரை எழுதும்போது அறிவனார் இயற்றிய "பஞ்சமரபு" என்ற நூல் கிடைக்கவில்லை என்று எழுதி இருக்கிறார்.

இசை நூல்களைப் பதிப்பித்த மற்ற இசை மேதைகளும் மறைந்து போன தமிழ் நூல்களில் பஞ்சமரபும் ஒன்றாகும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

பஞ்சமரபு நூல் நமக்குக் கிடைத்தது நாம் பெற்ற பெரும் பேறாகும்.

இந்த நூலின் ஏட்டுச் சுவடியைத் தேடி எடுத்துப் பாதுகாத்து வைத்து, தமிழ் நாட்டுக்கு வழங்கிய பெருமை என்

நண்பர் எழுமாத்தூர் வேலம்பாளையம் வித்வான் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்கே உரியது.

பஞ்சமரபு நூல் முன்னுரையோடும், அடிக் குறிப்பு களோடும், அரும்பதப் பொருள், அகரநிரல் என்ற பகுதிகளுடனும் சிறப்பாகப் பதிப்பிப்பதற்கு உதவி செய்த திரு கவுண்டர் அவர்களுக்குத் தமிழ்நாடு பெரிதும் நன்றிக் கடன் பட்டு இருக்கிறது.

பஞ்சமரபில் முதல் பதிப்பு வெளி வருவதற்குப் பெரிதும் உழைத்தவர் பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன் குடந்தை திரு ப.சுந்தரேசனார் அவர்களுக்கும் தமிழ்நாடு நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

முதல் பதிப்பை ஏட்டுச் சுவடியில் இருந்த படியே பதிப்பிக்க வேண்டும் என்பது "பஞ்சமரபு" ஏட்டுச் சுவடியைப் பாதுகாத்து வைத்திருந்த வித்வான் வெ.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டரின் விருப்பமாகும். அவர் விருப்பப்படியே பஞ்சமரபின் முதல் பதிப்பைப் பதிப்பித்து வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். பஞ்சமரபு நூலின் முதல் பதிப்பாசிரியர் வித்வான் தெய்வசிகாமணிக்கவுண்டர் என்று அவர் பெயரிலேயே வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்தேன்.

முதல் பதிப்பு 1973 ஆம் ஆண்டு கோவை சக்தி அறநிலையத்தின் சார்பில் வெளியிடப்பட்டது.

"பஞ்சமரபு" நூல் முதல் பதிப்பு வெளிவந்தவுடன், அது இசை வல்லுனர்கள மத்தியில் ஒரு புதிய விழிப்பு உணர்ச்சியையே ஏற்படுத்தியது.

இசை வல்லுனர்கள் " பஞ்சமரபு " பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளும் வெளியிட்டனர்.

பஞ்சமரபு நூலைப்பற்றிக் கருத்து அரங்குகள் நடைபெற்றன.

இவற்றை எல்லாம் பார்த்தவுடன் " பஞ்சமரபு" நூலுக்கு ஒப்பீட்டு விரிவு உரை ஒன்று வேண்டும் என்பதை உணர்ந்தேன்.

குடந்தை திரு சுந்தரேசனாரைப் போல இசை உணர்வும், தாள நுட்பமும், தமிழ் அறிவும் ஒருங்கே அமைந்த அறிஞரைத் தேடிக்கொண்டு இருந்தேன்.

அந்தச் சமயத்தில் சென்னைப் பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவரான டாக்டர் எஸ். சீதா அவர்கள் பேராசிரியர் திரு வீ.ப.கா. சுந்தரம் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தினார்.

பேராசிரியர் வீ.ப.கா.சுந்தரம் அவர்கள் இசைப்புலமை உடையவர் என்பதையும், தாள நுட்பங்களில் ஆற்றல் படைத்தவர் என்பதையும் அறிந்தேன்.

அவர் எழுதிய "தமிழிசை வளம்" என்ற நூலை மதுரைப் பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கிறது. அந்த நூலையும் படித்துப் பார்த்தேன்.

திரு.வீ.ப.கா. சுந்தரம் "பஞ்சமரபு" நூலுக்குப் போதுமான விளக்க உரை எழுதும் திறன் உள்ளவர் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

திரு வீ.ப.கா. சுந்தரம் அவர்களிடம் பஞ்சமரபு நூலுக்கு ஒப்பாய்வு விரிவுரை எழுதும்படி கேட்டுக்கொண்டேன். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அந்தப் பணியைச் செய்வதற்கு இசைந்தார். அவர் என்னுடன் பலமுறை 'பஞ்சமரபு' நூல் ஆராய்ச்சியைப்பற்றி கலந்து உரையாடினார். நான் என்னுடைய கருத்துக்களையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன்.

நான் விரும்பியபடியே 'பஞ்சமரபு' ஒப்பாய்வு விரிவுரை நூல் வெளிவந்து இருக்கிறது.

பஞ்சமரபு என்பது, இசை-முழவு-தாளம்-கூத்து-அபிநயம் என்ற ஐந்துக்கும் இலக்கணம் வகுத்திருக்கிறது.

இது ஏன் மரபு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது?.

சான்றோர்கள் வழி வழியாகச் சொல்லி வருகிற கலைத்துறையின் வரலாறுதான் மரபு.

எந்தப் பொருளைச் சான்றோர்கள் எந்தச் சொல்லால் சொன்னார்களோ அந்தச் சொல்லிலேயே அந்தப் பொருளை வழங்குவதுதான் மரபு.

எனவே இசை, முழவு, தாளம், கூத்து, அபிநயம் என்ற ஐந்து கலைகளையும் பற்றிச் சான்றோர்கள் எப்படி விளக்கி இருக்கிறார்களோ அதே மரபில் அறிவனாரும் பஞ்சமரபில் விளக்கி இருக்கிறார்.

சிலப்பதிகாரத்தில் பரிபூரணமாக இசை இலக்கணம் இருக்கிறது. அதுவும் அரங்கேற்றுக் காதையில் விரிவுரை விளக்கமாகவும் அமைந்து இருக்கிறது. அரங்கேற்றுக் காதையை அடிப்படையாகக் கொண்டுதான் திரு விபுலானந்தர் 'யாழ் நூல்' இயற்றி இருக்கிறார்.

இது போல " தென்னக இசை வரலாறு" என்ற பெயரில் சில நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வந்திருக்கின்றன.

இந்த நூல்கள் சென்ற நானூறு ஆண்டுகளுக்குள் வழங்கிவரும் கீர்த்தனை, தாளம் முதலியவற்றைப் பற்றிய செய்திகளைத்தான் சொல்லி இருக்கின்றன.

தென்னக இசையின் முழுமையான அமைப்பையும், ஆழத்தையும், நுட்பத்தையும் அறிந்து எழுதப்பட்ட நூல்கள் இதுவரை வெளிவரவில்லை.

தென்னக இசை வரலாறு தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூல்களில் பொதிந்து கிடக்கும் இசை நுட்பங்களின் குறிப்புகளுடன், சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை நூல்களில்

கிடக்கும் இசைக் குறிப்புகளையும் வைத்துக் கொண்டு எழுதவேண்டும்.

இந்த நூல்களில் காணப்படும் இசைக் குறிப்புகளைப் புரிந்துகொள்வதற்குப் பஞ்சமரபு விளக்க உரை நூலும், சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையும், பரிபாடல்களின் உரையும் மிகவும் துணை செய்யும்.

தொல்காப்பியமும், பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், நால்வகைப் பண்களைப்பற்றியும், திறமும், திறத்திறமும் அவற்றின் ஆரோசை, அமரோசைகளைப் பற்றியும் கூறி இருப்பவற்றை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறார். நான்கு பெரும்பண்களைப்பற்றிச் சிலப்பதிகாரத்தின் பதிக உரையில் அடியார்க்கு நல்லார் சிறப்பாக விளக்கி இருக்கிறார்.

அடியார்க்கு நல்லார் உரைக்குப் பெரிதும் உதவி இருப்பது, பஞ்சமரபு நூல்தான். அதில் உள்ள வெண்பாக்களையே அடியார்க்கு நல்லார் மேற்கோளாக எடுத்துக்காட்டி இருக்கிறார்.

திரு ந.மு. வேங்கடசாமி நாட்டார் சிலப்பதிகார விரிவுரையிலும் இதைப்பற்றிக் காண முடிகிறது.

எனவே பஞ்சமரபு நூல் இல்லை என்றால் சிலப்பதிகார இசை இலக்கண நுட்பங்களை விளக்கிக்கொள்ள முடியாது.

பஞ்சமரபு கூறும் இசை இலக்கணங்கள் அந்த நூல் தோன்றிய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து வழிவழியாக வந்திருப்பவை.

பஞ்சமரபு நூலில் இருக்கும் பாட்டிலும், தொகையிலும் காணப்படும் இசைக் குறிப்புகளில் இருந்தும் அவரால் உணர்த்தப்படும் வரலாற்றுச் செய்திகளில் இருந்தும் இந்த உண்மையைத் தெரிந்துகொள்ள முடிகிறது.